[1991 சனவரி 21

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

தொழிற்பேட்டை அமைத்தல்.

*11516—திரு. ஆ. நடராசன் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பேரூர் தொகுதி மலுமச்சம்பட்டி கிராமத்தில் '' சிட்கோ '' தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மேற்படி திட்டம் '' சிட்கோ '' நிர்வாகக்குழுவில் வைக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு உள்ளது. நிலங்கள் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலுமச்சம்பட்டி கிராமத்தில் ஏராளமான விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் துரிதமாக சிட்கோ தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மேற்படி நிலங்களைக் கையகப்படுத்த 1990 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் அரசு அனுமதியளித்துள்ளது. இந்நிலங்களைக் கையகப்படுத்துமாறு கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். நில எடுப்பிற்கான செயற்குறிப்பு பெறப்பட்டவுடன் அரசாங்கம் உடனடியாக நிலங்களை கையகப்படுத்தும்.